2014 பிப்ரவரி 19]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு சொந்தமான கட்டடத்தை ஒருங்கிணைந்த வளாகங்களுக்கு வழங்குவது அரசினுடைய வழக்கத்தில் இல்லை. அவர்களே வங்கியின்மூலமாகக் கடனைப் பெற்றுக்கூட கட்டடத்தைக் கட்டிக் கொள்ளலாம். இது தனியார் நடத்தக்கூடிய தொண்டு நிறுவனம். வங்கியின்மூலம் கடனைப் பெற்றுக்கொண்டு, அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டிக் கொள்வதற்கு, அனுமதி தருவதற்கு, அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***36277—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம் புதூரில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம் புதூரில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"வரப்புயர நீருய ரும்
நீருயர நெல்லுய ரும்
நெல்லுயரக் குடியுய ரும்
குடியுயரக் கோலுய ரும்
கோலுயரக் கோனுயர் வான்"

என்ற ஔவையின் வாக்கிற்கிணங்க, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தருகின்ற நல்லாட்சியை நடத்துகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஆதமங்கலம் புதூர், வேளாண் பெருங்குடி மக்கள் வேளாண் உற்பத்தியை அதிக அளவில் சாகுபடி செய்கின்ற பகுதியாகும். தற்போது ஆதமங்கலம் புதூரில் போளூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின்மூலமாக, முகவர் அடிப்படையில், நாளொன்றுக்கு 2 ஆயிரம் முதல் 4 ஆயிரம் மூட்டைகள் வரை விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, தேவையின் அடிப்படையில், விவசாயிகளின் நலன் கருதி, அரசு விதிமுறைகளுக்கேற்ப, விவசாயிகளிடமிருந்து அரசே நேரடியாக வேளாண் விற்பனை குழுவின்மூலம் நெல் கொள்முதல் செய்ய, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று பணிந்து வேண்டி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, 16 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் வட்டம், ஆதமங்கலம் புதூரிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டருக்கு அருகில் போளூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 5.71 ஏக்கர் பரப்பில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இது தவிர, 25 கி.மீ. அருகில் புதுப்பாளையம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 5.40 ஏக்கர் பரப்பளவில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, இந்த இரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களையும் விவசாயிகள் தற்போது பயன்படுத்தி

2014 பிப்ரவரி 19]

வருகிறார்கள். மேலும், ஆதமங்கலம் புதூருக்கு, வெளியூரிலிருந்தும் வியாபாரிகள் வந்து ஏலத்தில் பங்குகொள்ள வாய்ப்பு அதிகம் இல்லை என்ற சூழ்நிலை நிலவுவதால், விவசாயிகள் விளைப்பொருட்களை அதிக விலைக்கு விற்று பயனடைய வாய்ப்பு குறைவாக உள்ளது. இருந்தாலும் தேவை ஏற்படும்பட்சத்தில், விவசாய விளைப்பொருட்களின் வரத்து மற்றும் ஏலத்தில் பங்குகொள்ளும் விவசாயிகள் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பதற்கான விவரங்கள் சேகரிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

82—

நியாய விலைக் கடை கட்டடம்

***6603—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி ஊராட்சி ஒன்றியம், மேலாமத்தூர் ஊராட்சி, எம். மீனாட்சிபுரம் கிராமத்திலுள்ள பகுதிநேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஒன்றியத்தில் உள்ள ஆனைக்குட்டம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் இரண்டு முழுநேர நியாய விலைக் கடைகளையும், ஒரு